## வடமேல் மாகாண சபை

### 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு அளிக்கப்பட்ட உயர்ந்தபட்ச தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய, வட மேல் மாகாண சபை 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக உரிய கணக்கேடுகளை பேணியுள்ளது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வடமேல் மாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலை மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப்பாய்ச்சலை உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள்

#### நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

**(அ) மாகாண சபை நிதியக் கணக்கு**

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியக் கணக்கு 2012 ஏப்ரல் 19 திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) வருமானக் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிராமை**

மாகாண நிதிய விதிகளின் பிரகாரம் வருமானம் தொடர்பாக நியதிச்சட்ட அதிகாரம் வழங்கப்பட்டுள்ள கணக்கீட்டு உத்தியோகத்தரால் தமக்குரிய வருமானக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான மாகாண சபை வருமானத் தலைப்பிற்குரிய கணக்குகள் 2012 மார்ச் 31 வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனைய கணக்குகள்**

மீளாய்வாண்டு தொடர்பாக 2012 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு

மாகாணசபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| | கணக்கு | 2011 ஆம் ஆண்டு தொடர்பாக கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை | முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்கு | 26 | 26 | - | 05 |
| (ii) | வருமானக் கணக்கு | 04 | - | 04 | 12 |
| (iii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 74 | 60 | 14 | 32 |
| (iv) | வாணிப முற்பணக் கணக்குகள் | 07 | 05 | 02 | 02 |
| (v) | நிதியக் கணக்குகள் | 04 | 03 | 01 | 04 |
| (vi) | நியதிச் சட்டக் கணக்குகள் | 09 | 09 | - | 17 |
| | கூட்டுத்தொகை | 124 | 103 | 21 | 72 |

**1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

வடமேல் மாகாண விளையாட்டு நிதியத்தின் நிலையான வைப்பிற்காகக் கிடைக்கப்பெற்ற வட்டி ரூபா 730,022 தொகையும் ஆயட்கால அங்கத்தவர்களிடம் இருந்து பெறப்பட்ட அங்கத்துவக் கட்டணம் ரூபா 600,000 தொகையுமாக ரூபா 1,330,022 தொகையான வருமானம் மேலதிகமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

வடமேல் மாகாணசபைக்குரிய 02 திணைக்களங்களின் 01 ஆண்டிற்கு மேற்பட்டிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,949,873 ஆகக் காணப்பட்டது.

### 1.3.3 கட்டுநிதிக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மாகாணசபையின் 04 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மீளாய்வாண்டின் போது நிறுவகத்திற்கு தீர்க்கப்பட்டிராத கட்டுநிதி மீதி ரூபா 13,062,651 ஆனதுடன் இம் மீதியில் ஒரு வருடத்திற்கும் மேலான காலமாகத் தீர்க்கப்படாத ரூபா 819,533 மீதி காணப்பட்டது.

### 1.3.4 பொது வைப்புக் கணக்குகள்

நிதிப் பிரமாணம் 571 இல் காண்பிக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படக்கூடியதாக இருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டு காலத்திற்கு மேற்படடிருந்த பொது வைப்புக் கணக்குகளின் பெறுமதி ரூபா 4,228,021 ஆகக் காணப்பட்டது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் சான்றுகள் இல்லாமை கண்டறியப்பட்டது.

#### (அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 31 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐயவினாக்களில் உள்ளடக்கப்பட்ட கணிப்பிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 28,306,746 ஆகும்.

#### (ஆ) தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிராமை

வடமேல் மாகாணசபையின் 04 நிறுவகங்கள் தொடர்பாக பின்வரும் தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 343,919 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

(i) பொருட்களைப் பகிர்ந்தளித்தமைக்கான எழுத்துமூலச் சான்றுகள்
(ii) நீர் வடிகட்டி திருத்தவேலை விபரங்களும் விலைகளும்
(iii) பொருள் கொள்வனவுத் தேவைப்பாடுகள்

### 1.3.6 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்களில் சில பின்வருமாறாகும்.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) நியதிச் சட்ட ஏற்பாடு** | |
| (i) 1956 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் | சிற்பக் கலைகளில் கடமையாற்றும் 06 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 57,978 தொகை ஊழியரின் பங்களிப்பாக 2010 ஆம் ஆண்டிற்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 1992 இன் 42 ஆம் இலக்க வடமேல் மாகாண விளையாட்டு கட்டளைச்சட்டத்தின் 15(4) மற்றும் 16 ஆம் பிரிவுகள் | ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டு முடிவுற்றதன் பின்னர் இயலுமான அளவு விரைவாக வடமேல் மாகாண விளையாட்டு நிதியத்தின் நிர்வாகம் தொடர்பான ஓர் அறிக்கை அமைச்சின் செயலாளரால் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் வடமேல் மாகாண சபைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கடந்த ஆண்டிற்காக அவ்வறிக்கை தயாரிக்கப்பட்டு மாகாண சபைக்குச் சமாப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) நிதிப் பிரமாணம்

| | |
|---|---|
| நி.பி. இல 571 | மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் 02 ஆண்டுகளுக்கு மேலான காலமாக வைப்புக் கணக்கொன்றில் நிறுத்திவைக்கப்பட்டு 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 250,564 தொகையான பணம் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) தாபனவிதிக் கோவை

| | |
|---|---|
| II ஆம் அத்தியாயத்தின் 13.3 மற்றும் 13.4 ஆம் பந்திகள் | பல வருட காலமாக கிரிஉல்ல மற்றும் நிக்கவரட்டிய வலயங்களில் உள்ள 93 பாடசாலைகளுக்கு அதிபர் பதவிகளில் பதில் கடமையாற்றுவதற்கு தகமை அற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அப் பதவிகளுக்கு முறையான நியமனங்களை வழங்குவதற்கு 2011 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) அரசாங்க கேள்வி நடைமுறை தொடர்பான வழிகாட்டி கோவை 2006 மார்ச் 01 ஆம் திகதிய கொள்வனவுச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| (i) 3.3 ஆம் பந்தி<br>2.7.7 ஆம் பந்தி | கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றாது 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 116,255 பெறுமதியான பொருட்களை டீ.பீ. விக்ரமசிங்ஹ வித்தியாலயமும் ரூபா 996,800 பெறுமதியான மின்பிறப்பாக்கி இயந்திரம் ஒன்றினை வடமேல் மாகாண ஆளுனர் காரியாலயமும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்தன. |

| | | |
|---|---|---|
| (ii) | 4.2.2 ஆம் பந்தி | 2011 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 12,981,952 பெறுமதியான தளபாடங்களும் உபகரணங்களும் உரிய மாதிரிகளிற்கு இணங்கி இருக்காத போதிலும் இதற்காக வழங்குனர்களுக்கு 2011 திசெமபர் 31 ஆம் திகதி வரையப்பட்டிருந்த 11 காசோலைகள் 2012 ஏப்ரல் 02 ஆம் திகதி வரையிலும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. |

(உ) மாகாண நிதி விதி

------------------------------

| | | |
|---|---|---|
| (i) | மாகாண நிதி விதிகள் 91.2(உ), 117.1 மற்றும் 118 | 2011 ஆம் ஆண்டின் போது 4 பிரதேச செயலகங்களால் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் ரூபா 20,541,020 பெறுமதியான வருமானம் மாகாணசபைக்கு அனுப்பிவைக்கப்படாது வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) | மாகாண நிதி விதி 274 | மாகாண சபையின் எந்த ஒரு கணக்கில் இருந்தும் மேலதிகப்பற்றைப் பெறுவது தடை செய்யப்பட்டிருந்த போதிலும் முறையான அங்கீகாரம் இன்றி கிரிஉல்ல வலயக் கல்விக் காரியாலயத்தினால் 2011 ஆம் ஆண்டின் போது 05 சந்தர்ப்பங்களில் வங்கி மேலதிகப்பற்றுக்கள் பெறப்பட்டிருந்தன. |
| (iii) | மாகாண நிதி விதி 283 | மீளாய்வாண்டின் போது மாகாண சபையின் 04 நிறுவனங்களில் காணப்பட்ட 6 மாதங்கள் கடந்த ரூபா 6,221,514 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக மாகாண நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | மாகாண நிதி விதிகள் 560,561.10(உ), 477 என்பன | மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 23 குளிரூட்டல் இயந்திரங்கள் சொத்துப் |

| | |
|---|---|
| | பதிவேடுகளிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன் வருடாந்த மெய்மையாய்வும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

(ஊ) சுற்றறிக்கை

| | |
|---|---|
| (i) நிதி ஆணைக்குழு சுற்றறிக்கை<br><br>2011 யூலை 26 ஆம் திகதிய எப்சீ/பீஎஸ்டிஜீ/ சீபீஜீ/2011/1 ஆம் இலக்க நிதி ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. | மாகாண முதலீட்டு நிதியத்தின் மூலம் நேரடி மானியமாக சுய தொழிலிற்காக உபகரணத் தொகுதியைப் பெற்றுக்கொள்வதற்கு அவற்றின் கிரயத்தில் இருந்து 90% மாத்திரம் மானியப் பெறுனர்களுக்கு செலுத்தப்படக்கூடிய போதிலும் தங்கொடுவ பிரதேச செயலாளர் காரியாலயத்தின் மூலம் 15 நலன்பெறுனர்களுக்கு உபகரணத் தொகுதிகளின் மொத்தக் கிரயமான ரூபா 398,200 தொகை மாகாண சபை முதலீட்டு நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | வடமேல் மாகாணத்தில் சேவையில ஈடுபட்டிருந்த 18 உத்தியோகத்தர்களில் 1992 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை புத்தளம் வலய கல்விக் காரியாலயத்தில் இருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதியின் கூட்டுத்தொகை ரூபா 952,540 ஆனதுடன் வடமேல் மாகாணத்தில் வேறு நிறுவகங்களில் இருந்து மாற்றம் பெற்று வருகை தந்த 11 உத்தியோகத்தர்களுக்காகச் செலுத்தப்பட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 734,020 ஆன போதிலும் அதனை 2012 யூன் 30 ஆம் திகதி வரை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) சுகாதாரத் திணைக்களத்தின் மனோதத்துவ ஆலோசகர் | வடமேல் அரசாங்க சேவை ஆணைக்குழு பரிந்துரைப்பு செய்த வடமேல் மாகாண அரச |

| | | |
|---|---|---|
| | பதவிக்கு ஆட்சேர்த்தல் மற்றும் பதவி உயர்வு நடைமுறையின் 5.2.1 ஆம் பந்தி மற்றும் 5.2.1(2) ஆம் பந்தி | சேவையில் தகமை உறுதிப்படுத்தப்படாது ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய ஒரு நபர் மாகாண அரச சேவையில் நிரந்தர உத்தியோகத்தராகக் கருதப்பட்டு மனோதத்துவ ஆலோசகர் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். |
| (iv) | அரசாங்க காணி செயற்பாட்டு விதிக்கோவை 132 மற்றும் 134 | 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான 12 பிரதேச செயலாளர் காரியாலயங்களில் நிலுவையாகக் காணப்பட்ட நீண்டகால மற்றும் வருடாந்த காணிக் குத்தகையின் கூட்டுமொத்தப் பெறுமதி ரூபா 2,682,453 ஆன போதிலும் நிலுவைக் கட்டணத்தை அறவிடுவதற்கும் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் மிகை ரூபா 604,901,992 ஆக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 178,191,182 ஆக இருந்தது.

## 2.2 வருமானங்கள் மற்றும் செலவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் பற்றிய பொழிப்பொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| | 2011 | | | 2010 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப் பட்டவை | உள்ள படியானவை | முரண் | பாதீடு செய்யப் பட்டவை | உள்ள படியானவை | முரண் |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| **வருமானங்கள்** | | | | | | |
| வரி வருமானம் | 2,714.70 | 3,071.77 | (357.07) | 2,870.00 | 2,321.62 | 548.38 |
| வரி அல்லாத வருமானம் | 606.30 | 1,298.63 | (692.33) | 740.00 | 626.99 | 113.01 |
| அரசாங்க மானியம் | 15,843.44 | 14,680.51 | 1,162.93 | 15,384.50 | 14,280.25 | 1,104.25 |
| **மொத்தம்** | 19,164.44 | 19,050.91 | 113.53 | 18,994.50 | 17,228.86 | 1,765.64 |
| **மீண்டுவரும் செலவுகள்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 12,718.26 | 13,452.99 | (734.73) | 12,502.99 | 12,118.32 | 384.67 |
| ஏனையவைகள் | 4,261.16 | 3,102.56 | 1,158.60 | 4,221.85 | 2,903.96 | 1,317.89 |
| உப மொத்தம் | 16,979.42 | 16,555.55 | 423.87 | 16,724.84 | 15,022.28 | 1,702.56 |
| மூலதனச் செலவுகள் | 2,185.00 | 1,890.47 | 294.53 | 2,469.66 | 2,028.38 | 441.28 |
| மொத்தம் | 19,164.42 | 18,446.02 | 718.40 | 19,194.50 | 17,050.66 | 2,143.84 |

மீளாய்வாண்டிற்கான ரூபா 18,446.02 மில்லியனான மொத்த செலவினத்தில் 90% மீண்டுவரும் செலவினமாக இருந்ததுடன் 10% மூலதனச் செலவினமாக இருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கடந்த 3 ஆண்டுகளுக்கான மாகாண சபையின் வருமானக் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் கடந்த 02 ஆண்டுகளின் அவ்வாறு ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் நிலவிய நிலுவை வருமானம் மீளாய்வாண்டிற்கான நிலுவை வருமானத்துடன் ஒப்பிடப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வரி வருமானம் | 5,462,082 | 548,375,620 | 182,981,777 |
| வரியல்லா வருமானம் | 16,574,054 | 4,100,006,361 | 31,690,098 |
| | 22,036,136 | 4,648,381,981 | 214,671,875 |

(ஆ) 2011 சனவரி 01 முதல் 2011 திசெம்பர் 31 வரை 30 உள்ளுராட்சி அதிகாரசபைகள் தொடர்பாக பெறப்பட்டிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 61,721,041 தொகையும் முத்திரைக் கட்டணமான ரூபா 89,755,692 தொகையும் உள்ளுராட்சி அதிகாரசபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச செயலாளர் காரியாலய அதிகார எல்லைக்குள் உள்ள வாகனங்கள் தொடர்பான தகவல்களை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராத காரணத்தினால் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 15 அளவிலான பிரதேச செயலாளர் காரியாலயங்களில் ரூபா 24,166,826 தொகையான வாகன அனுமதிப்பத்திர வருமானம் நிலுவையாகக் காணப்பட்டன.

## 2.4 அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளின் சேமிப்பு

மாகாண சபை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கீழுள்ள 13 தலைப்புகள் தொடர்பாக 46 சந்தர்ப்பங்களின் போது ஒதுக்கப்பட்டிருந்த ரூபா

7,606,440 மொத்தப் பெறுமதியான ஏற்பாடுகள் முற்றாக சேமிக்கப்பட்டிருந்ததுடன் 23 தலைப்புகள் தொடர்பாக 141 சந்தர்ப்பங்களின் போது ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,431,544,700 மொத்தப் பெறுமதியான ஏற்பாட்டில் 25% முதல் 99% வரையான வீச்சிலான ஏற்பாடு சேமிக்கப்பட்டமை காணக்கூடியதாக இருந்தது.

## 2.5 ஏற்பாட்டு மாற்றங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வடமேல் மாகாண சபைக்கு மீளளிப்பின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 958,182,400 தொகையான ஏற்பாட்டில் 2% முதல் 94% வரையான வீச்சிலான ரூபா 137,173,070 தொகை மாகாண நிதி விதி 30 – 32 இன் கீழ் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்த 10 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(ஆ) செலவின விடய இல. 231–70–03–1001 இன் கீழ் ரூபா 78,576,000 தொகையான குறைநிரப்பு நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதற்கு மேலதிகமாக 2011 ஆம் ஆண்டின் போதான குறைநிரப்பு ஏற்பாட்டுத் தொகையினை மிகைத்து ரூபா 90,665,506 தொகை மாகாண நிதி விதி 30 – 32 இன் கீழ் அச் செலவின விபரத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

## 2.6 முற்பணக் கணக்குகளில் எல்லைகள் பின்பற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 503 மற்றும் வடமேல் மாகாண சபை நிதிய விதி 369 இன் விதப்புரைகளுக்கு முரணாக வணிக முற்பணக் கணக்கு விடயங்கள் 01 இன் செலவின் உச்ச எல்லை ரூபா 5,314,774 ஆலும் 03 விடயங்களின் வரவு மீதியின் உச்ச எல்லை ரூபா 33,613,214 ஆலும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு விடயம் 01 இன் பெறுவனவுகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 1,462,402 ஆல் பின்பற்றப்பட்டிராததுடன் அரசாங்க அமைச்சுக்கள் மற்றும்

திணைக்களங்களின் 41 விடயங்கள் தொடர்பான செலவினத்தின் உச்ச எல்லை ரூபா 1,134,293 ஆல் மிகைத்திருந்தது.

## 2.7 தொழிற்பாட்டு நட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 01 வணிக முற்பணக் கணக்கில் மீளாய்வாண்டின் போது வெளியிடப்பட்ட தொழிற்பாட்டு நட்டம் ரூபா 2,101,064 ஆகக் காணப்பட்டதுடன் கடந்த 21 ஆண்டுகளின் போது தொடர்ச்சியாக தொழிற்பாட்டு நட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது. மாகாண நிதி விதி 375 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்குறித்த தொழிற்பாட்டு நட்டத்தை ஈடுசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் முற்பணக் கணக்குகளை நட்டத்தில் பேணும் பொருளாதார மற்றும் சமூக நியாயத்தன்மை தொடர்பாக முகாமைத்துவத்தினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வணிக முற்பணக் கணக்குகளில் முன்னைய ஆண்டில் வெளிப்பட்ட ரூபா 3,382,494 தொகையான நட்டத்திற்காக மாகாண நிதி விதி 379 இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.8 மனிதவள முகாமைத்துவம்

### 2.8.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமேல் மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்கள் என்பன.

| | அங்கீகரிக்கப் பட்டவை | உள்ளபடியா னவை | பற்றாக்குறை | (மிகை) |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுனர்கள் உதவியாளர்கள் | 10,690 | 8,951 | 1,739 | - |
| சிற்றூழியர் | 6,909 | 5,640 | 1,269 | - |
| ஏனையவை (அமைய, தற்காலிக) | - | 1,642 | - | (1,642) |
| மொத்தம் | 17,599 | 16,233 | 3,008 | (1,642) |

(ஆ) பாடசாலை பதவியணியினர்

| | அங்கீகரிக்கப் பட்டவை | உள்ளபடியா னவை | பற்றாக்குறை | (மிகை) |
|---|---|---|---|---|
| அதிபர் | 1,430 | 1,069 | 361 | - |
| ஆசிரியர்கள் | 23,573 | 23,354 | 219 | - |
| சிற்றூழியர் | 1,359 | 1,290 | 69 | - |
| ஏனையவை | 1,516 | 1,076 | 440 | - |
| அமைய, தற்காலிக | - | 02 | - | (02) |
| | 27,878 | 26,791 | 1089 | (02) |

மேற்குறித்த தரவுகள் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் விடயங்களும் கண்டறியப்பட்டன.

(i) சிறு கைத்தொழில் திணைக்களத்தினால் முகாமைத்துவ சேவைகள்

திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 03 அபிவிருத்தி உதவி உத்தியோத்தர்களும் 03 நிகழ்ச்சித்திட்ட உதவி உத்தியோகத்தர்களும் மீளாய்வாண்டில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சம்பளமாக ரூபா 868,115 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) கிரிஉல்ல வலய கல்விக் காரியாலயத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை ஆய்வு செய்கையில் அங்கீகாரம் இன்றி இரண்டு சாதாரண ஊழியர்களும் 19 காவலாளிகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மாகாண சபையால் சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

**2.8.2 மிகையான மனிதவளங்கள்**

சமூக நலன்புரி நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு மகளிர் விவகார கிராமிய அபிவிருத்தி அமைச்சில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக 19 நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களும் 08 செயற்பாட்டு ஆலோசகர்களும் சேர்த்துகொள்ளப்பட்டு சம்பளமாக ரூபா 231,348 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**2.9 சொத்து முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**2.9.1 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான பௌதீக வளங்கள்**

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு பௌதீக வளங்கள் விளைவற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்டும் இருந்தமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்துக்களின் தன்மை | எண்ணிக்கை/ வகை/ அளவு | பெறுமதி | விளைவற்றுக் காணப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | கட்டிடம் | | | |
| | கணனி அறை | 01 | 338,073 | 03 ஆண்டுகள் |
| (ஆ) | காரியாலய உபகரணம் | | | |
| | (i) சங்கீத | 24 | 199,332 | 5 ஆண்டுகளுக்கு மேலானவை |

| | | | | |
|---|---|---|---|---|
| | உபகரணங்கள் | | | |
| (ii) | கணனி | 13 | 128,348 | 1 ஆண்டிற்கு மேலானவை |
| (iii) | உபகரண இருப்பு | 01 | 106,840 | 2 ஆண்டுகளுக்கு மேலானவை |
| (இ) | ஏனையவை | | | |
| (i) | குழாய்க் கிணறு நிர்மாணம் | 01 | 388,120 | 2 ஆண்டுகளுக்கு மேலானவை |
| (ii) | தெளி கருவி | 19 | 194,750 | 1 ஆண்டிற்கு மேலானவை |
| (iii) | சீ.எப்.எல் பல்ப் | 1502 | 351,468 | 1 ஆண்டிற்கு மேலானவை |
| (iv) | மீன்பிடி உபகரண இருப்பு | 01 | 6,934,870 | 1 ஆண்டிற்கு மேலானவை |
| (v) | நீர்ச் செயற்திட்டம் | 01 | 229,814 | 1 ஆண்டிற்கு மேலானவை |
| | | | ----------- | |
| | | | 8,871,615 | |
| | | | ======= | |

(ஈ) வடமேல் மாகாண வைத்தியசாலை, மத்திய மருந்தகம் மற்றும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் காரியாலயங்களுடன் இணைத்து நிர்மாணிப்பட்ட 40 உத்தியோகபூர்வ விடுதிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது 10 ஆண்டுகளுக்கு மேலான காலமாக மூடிவைக்கப்பட்டிருந்தது.

(உ) ஏ/26 -667852 ஆம் இலக்க வழங்கல் கட்டளையில் இருந்து 2006 ஆம் ஆண்டின் போது தம்பதெனியா வைத்தியசாலைக்குக் கிடைக்கப்பெற்றுள்ள 14 சிறுவர் கட்டில்களும் இறப்பர் மெத்தைகளும் 2011 யூலை 05 ஆம் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்காததுடன் வேறு வைத்தியசாலைக்கேனும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.9.2 வேறு நிறுவகங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள பௌதீக வளங்கள்**

சிறு கைத்தொழில் திணைக்களத்தின் 15 தச்சு வேலை நிலையங்கள், 17 தும்பு நிலையங்கள், 04 பொறியியல் நிலையங்கள், 05 மட்பாண்ட நிலையங்கள் மற்றும் 01 சமூக நிலையம் என்பனவாக ஸ்தாபிக்கப்பட்டிருந்த

நிலையங்களை மேம்படுத்தல் மற்றும் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இந் நிலையங்கள் அமைந்துள்ள காணி, சிறுகைத்தொழில் திணைக்களத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.9.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண நிதி விதி 476 இன் பிரகாரம் மாகாண சபையின் 04 அமைச்சுக்கள் / திணைக்களங்களில் மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தம்பதெனிய ஆதார வைத்தியசாலை மருந்துக் களஞ்சியத்தில் 2011 யூலை 05, 06 மற்றும் 07 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் ரூபா 617,262 பெறுமதியான 43 மருந்து வகைகளின் பற்றாக்குறைகளும் ரூபா 41,244 பெறுமதியான 27 மருந்துப் பொருட்களின் மிகைகளும் ரூபா 67,498 பெறுமதியான 8 வகையான சத்திரசிகிச்சை உபகரணங்களின் பற்றாக்குறையும் ரூபா 11,429 பெறுமதியான 03 வகையான சத்திரசிகிச்சை உபகரணங்களின் மிகைகளும் வெளிப்படுத்தப்பட்டன.

### 2.9.4 பெறவேண்டிய கணக்குகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியதாக இருந்த 03 நிறுவகங்களுக்குரிய 05 மீதிகளின் பெறுமதி ரூபா 26,616,865 ஆனதுடன் 01 ஆண்டு காலத்தினை மிகைத்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,274,827 ஆகக் காணப்பட்டது.

### 2.9.5 தீர்த்து வைக்கப்படாத முற்பணங்கள்

மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் 2008 ஆம் ஆண்டிற்கான 2010 செப்தெம்பர் 31 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் பிரகாரம் இடமாற்றலாகி வருகைதந்த, இடமாற்றலாகிச் சென்ற, சேவையை விட்டுச் சென்ற, மரணமடைமந்த மற்றும் ஓய்வுபெற்ற பதவியணி

உத்தியோகத்தர்களிடம் இருந்து முறையே ரூபா 50,026,962, ரூபா 28,969,041, ரூபா 423,085 மற்றும் ரூபா 677,614 தொகையான கடன் மீதிகள் தீர்க்கப்படாதிருந்தன.

### 2.9.6 அறவிடுவதற்குள்ள ஊழியக் கடன்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,923,350 ஆகக் காணப்பட்டதுடன் 01 வருட காலத்திற்கு மேலாக அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 993,689 ஆகக் காணப்பட்டது.

(ஆ) மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் சேவையை விட்டு விலகிய இரு உத்தியோகத்தர்களிடமிருந்து சேவை மற்றும் இடைநிறுத்தப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 147,150 மற்றும் ரூபா 212,300 தொகைகள் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை தீர்த்து வைத்தலினை கணக்கீடு செய்கையில் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கடன் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் அம் மீதி ரூபா 662,836 ஆகக் காணப்பட்டதுடன் மாகாண நிதி விதி 368 இன் பிரகாரம் செலவு மீதிச் சீராக்கற் குறிப்பின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 745,106 ஆனமையால் ரூபா 82,270 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) 1992 ஆம் ஆண்டு முதல் 2010 வரையான காலப்பகுதியின் போது புத்தளம் வலயக் கல்விக் காரியாலயத்தில் இருந்து வேறு திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற 224 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,069,927 ஆகக் காணப்பட்டதுடன் வேறு திணைக்களங்களில் இருந்து வருகை தந்த 78

உத்தியோகத்தர்களுக்காக உரிய திணைக்களங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,501,315 ஆனமையால் அவற்றினை 2012 யூலை 31 வரை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 இனங்காணப்பட்ட நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது மற்றும் நிறுவகங்களில் பேணப்பட்ட தகவல்களின் படி பின்வரும் நட்டங்களும் சேதங்களும் கண்டறியப்பட்டிருந்தன.

(அ) சிறு கைத்தொழில் திணைக்களத்தின் 2 நிறுவகங்களின் வருடாந்த குத்தகை மற்றும் நேர்ந்த நட்டங்கள் காரணமாக முறையே ரூபா 960,030 மற்றும் ரூபா 4,858,720 தொகைகள் அறவிடப்பட வேண்டியிருந்தன.

(ஆ) மண் அகழ்விற்கான அரச இறையில் வடமேல் மாகாண விவசாய அமைச்சினால் அறவிடப்பட வேண்டிய ரூபா 33,762 தொகை 2011 திசெம்பர் 31 வரை அறவிடப்படாதிருந்தது.

(இ) கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட வடமேல் மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் குருனாகல் களஞ்சியசாலை மற்றும் 2 வைத்தியசாலைகளின் ரூபா 21,969,201 பெறுமதியான காலாவதியான 125 இருப்புக்களுக்குரிய 1,391,407 மருந்துகளும் அறுவைச்சிகிச்சை உபகரண அலகுகளும் தெரிவு வெற்றியளிக்காமையின் அடிப்படையில் ரூபா 35,334 பெறுமதியான 55172 மருந்துப் பொருள் இருப்பு அலகுகள் களஞ்சியத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 41-5440 ஆம் இலக்க அம்பியூலன்ஸ் வண்டியின் டயர் முறைமை முற்றாகத் தீப்பற்றியமையால் ரூபா 473,050 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஈ) இரு தனியார் கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 98,576 கூட்டு மொத்தப் பெறுமதியான விளைச்சல் குத்தகை பன்னல பிரதேச செயலாளரினால் 2011 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.11 வெளிப்படையான, மோசடியான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சுகாதார, தேசிய மருத்துவ, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் பாதணிகள் கொள்வனவிற்காக ஒரு விளையாட்டு வீரருக்கு ரூபா 14,500 படி கொடுப்பனவு செய்யப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த 10 பொது 35 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்காக ரூபா 145,000 தொகை தலைமையக விளையாட்டு உத்தியோகத்தர்களால் அக் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் போலிக் கையொப்பம் இட்டு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) குருநாகல் சேர் ஜோன் கொத்தலாவல மகா வித்தியாலயத்தின் வருகைதரு ஆசிரியரின் செயற்திட்டமாக திருத்தப்பட்ட சங்கீத அறையை மீளத் திருத்துவதற்காக 6 – 11 ஆம் ஆண்டு சங்கீத ஆசிரியையால் அங்கீகாரம் இன்றி ஒரு மாணவரிடம் இருந்து ரூபா 200 படி ரூபா 18,800 தொகை சேகரிக்கப்படுகையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) குளியாப்பிட்டிய வலயத்தில் பமினிகல்ல ஸ்ரீ சப்த விமல கனிஷ்ட வித்தியாலயத்தில் 60x25 அளவுள்ள வகுப்பறைக் கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்குரிய மதிப்பீட்டு விடய இல. 11 முதல் 16 வரையான பகுதி பெற்றோர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக ரூபா 38,345 தொகை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) இப்பாகமுவ வலய கல்வி காரியாலய முற்பணப் பதிவேட்டின் பிரகாரம் இருக்க வேண்டிய காசு மீதி ரூபா 93,942 ஆன போதிலும் கையிலுள்ள காசு மீதியாக ரூபா 48,817 தொகை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டதனால் ரூபா 45,125 தொகையான பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது.

## 2.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதிய 639 ஆம் இலக்க உறுதிச்சீட்டின் கீழ் குளியாப்பிட்டி வீதி அபிவிருத்தி திணைக்களம் 58600 லீற்றர் தாரினை ரூபா 5,361,900 செலவில் கொள்வனவு செய்திருந்த போதிலும்

கொள்வனவு செய்வதற்கு முன்னர் தேவைப்பாடுகள் இனங்காணப்படாமையால் 2012 பெப்ரவரி 10 ஆம் திகதி வரை களஞ்சியத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) நிகவரட்டிய வலயக் கல்வி காரியாலயம் 2010 ஆம் ஆண்டிற்காக சீருடைகள் கட்டளையிடுகையில் முறையான ஆய்வின்றி நடவடிக்கை எடுத்ததனால் 2010 ஆம் ஆண்டிற்காகப் பெறப்பட்டிருந்த 8783 சீருடைத் தொகுதிகள் 2011 நவம்பர் 16 வரை களஞ்சியத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) அரச நிருவாக அமைச்சிற்குச் சொந்தமான தற்போது வடமேல் மாகாண சுகாதார அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்ட உத்தியோக பூர்வ விடுதி முறையாக பேணப்பட்டிராமையால் குடியிருப்பிற்கு ஏற்ற நிலையில் இல்லை எனக் குறிப்பிட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு வருடாந்தம் ரூபா 300,000 தொகையான குத்தகை அடிப்படையில் ஒரு வீடு பெறப்பட்டிருந்தது.

(ஈ) மாகாண கல்வித் திணைக்களம் ரூபா 1,318,605 தொகை செலவில் குருநாகல் வலயத்தில் 3 பாடசாலைகளுக்கு முறையே 2012 பெப்ரவரி 17 மற்றும் 2012 பெப்ரவரி 08 திகதிகளில் கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் 14 தொகுதிகள் படி வழங்கப்பட்டிருந்ததுடன் இதில் 04 கணனித் தொகுதிகள் 2011 திசெம்பர் 31 வரை செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(உ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புத்தளம் வலயக் கல்விக் காரியாலயத்தின் காசாளரின் பெயரில் வரையப்பட்ட ரூபா 281,283 பெறுமதியான 19 காசோலைகள் 2012 சனவரி 13 கணக்காய்வுத் திகதி வரை பணமாக மாற்றப்பட்டிருக்கவில்லை.

## 2.13 போதிய அதிகாரப் பொறுப்பினால் உறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 9.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஓய்வு பெற்ற ஓர் உத்தியோகத்தர் ஒப்பந்த அடிப்படையில் மீள

சேவையில் ஈடுபடுத்தப்படுவதற்காக அமைச்சரவையின் முன்னங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் சமூக நலன்புரி நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு மகளிர் விவகார கிராமிய அபிவிருத்தி அமைச்சு இதற்கு முரணாக, அமைச்சரவை அங்கீகாரம் இன்றி முன்னாள் செயலாளர் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சம்பளங்கள், படிப்பணங்கள் மற்றும் விடுமுறைதினக் கொடுப்பனவாக ரூபா 109,154 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் மாகாண சபைச் செயலகத்தின் ஓய்வு பெற்றுச்சென்ற உத்தியோகத்தர் மீள சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சம்பளங்கள் மற்றும் எரிபொருட் படியாக ரூபா 134,634 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) உதவி பெறும் ஓர் பயிற்சியாளருக்குச் செலுத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூபா 9,000 ஆன போதிலும் கொடுப்பனவுப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 19,000 தொகை சுகாதார சுதேச மருத்துவ, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சுகாதார, சுதேச மருத்துவ, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு 2011 மே 09 ஆம் திகதி நடாத்திய தேசிய தெலசீமியா விழாவில் மேடை ஒழுங்குகள் மற்றும் அறிவிப்பு நடவடிக்கைகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவிப்பாளருக்கு அச் செயற்பாட்டிற்காக கொள்வனவு சபையின் தீர்மானத்தின் பிரகாரம் செலுத்தப்படுவதற்கு உடன்பட்டிருந்த ரூபா 50,000 தொகைக்கு மேலதிகமாக ரூபா 25,000 ஆக ரூபா 75,000 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) வடமேல் மாகாண வீதி அபிவிருத்தி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும் மற்றும் மீன்பிடி விவகார அமைச்சில் அமைச்சரின் சொந்த பதவியணியில் அங்கீகரிக்கப்பட்டிராத 06 பதவியணி உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டு ரூபா 2,166,605 தொகை சம்பளமாக 2011 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 2011 யூலை 05 ஆம் திகதி தம்பதெனியா வைத்தியசாலையின் காசாளரின் கையில் எஞ்சியிருந்த தொகையில் ரூபா 34,928 தொகை குறித்த பற்றுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படாது சேகரிக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக முறையான அங்கீகாரம் உரிய அமைச்சின் செயலாளரிடம்

இருந்தோ அல்லது மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரிடம் இருந்தோ பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரம் இன்றி குருநாகல் சேர் ஜோன் கொத்தலாவலை மஹாவித்தியாலயத்தின் 1 – 5 ஆம் தர மாணவர்களிடம் இருந்து ரூபா 343,200 தொகை பற்றுச்சீட்டுக்கள் இன்றி சேகரிக்கப்பட்டிருந்தது.

(எ) வடமேல் மாகாண விளையாட்டு நிதியத்தின் மூலம் ஊக்குவிப்பு படி மற்றும் உபகாரப்படியாக ரூபா 188,500 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் இக் கொடுப்பனவில் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்காக செலுத்தப்பட்ட தொகை தீர்மானிக்கப்படுவது தொடர்பாக கொள்கை தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ஆளுனரின் விடுதியைச் சுற்றி வலையிலான வேலி நிர்மாணிப்பதற்காக 2011 யூலை 01 ஆம் திகதி ரூபா 329,425 தொகையும் மின்பிறப்பாக்கி இயந்திரத்தினை பொருத்துவதற்கான ஒரு கூடாரத்தை தயாரிப்பதற்காக 2011 திசெம்பர் 07 ஆம் திகதி ரூபா 321,818 தொகையும் உள்ளடங்கலாக ரூபா 651,270 கூட்டுத்தொகை 201- 03-01-2004 செலவினத் தலைப்பில் இருந்து செலவிடப்பட்டிருந்த போதிலும் இத்தகைய செலவினத் தலைப்பிற்காக வருடாந்த மதிப்பீட்டில் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிராததுடன் மாகாண நிதி விதியின் 01 ஆம் அத்தியாயத்தின் 24:3 மற்றும் 24:4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மதிப்பீடு திருத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.14 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) குளியாப்பிட்டி வீதி அபிவிருத்தி திணைக்களம் 2011 யூலை 25 ஆம் திகதி நிதி ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட எப்சீ/பீசீஜீ மற்றும் சீபீஜீ/சுற்றறிக்கை /2011/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6(8) ஆம் பந்திக்கு முரணாக தற்காலிக வேலை நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் ரூபா 254,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) முதல் அமைச்சின் வருடாந்த திட்டத்தில் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாத 25 வீதிகளின் 6.7 கி.மீ. தூரத்தின் அபிவிருத்திக்காக ரூபா 8,390,146 தொகை ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

(இ) மாகாண சுகாதார சேவை திணைக்களம் 2011 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் மற்றும் திசெம்பர் மாதங்களில் கொள்வனவு செய்வதற்காக கட்டளைகள் ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 3,479,929 பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் 2012 ஆகஸ்ட் மாதமளவிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்காக அங்கீகாரம் இன்றி அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்கு மேலாக மீளாய்வாண்டின் போது 2002 லீற்றர் எரிபொருள் பெறப்பட்டிருந்தது.

## 2.15 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட சர்ச்சைக்குரிய தன்மையிலான அல்லது பிரச்சினைத் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறாகும்.

(அ) வடமேல் மாகாண ஆளுனரின் பிரத்தியேகச் செயலாளர் சேவையில் ஈடுபடுத்தப்படாத 2010 திசெம்பர் மாதம் முதல் 2011 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கான படியாக ரூபா 177,028 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2001 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2009 மார்ச் 31 வரையான காலப்பகுதியில் ரூபா 04 மில்லியன் அளவிலான நிதி மோசடி ஏற்பட்டிருந்த ஒரு சங்கத்தின் 08 கணக்குகள் கூட்டுறவு ஆணையாளரினால் சரியென சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்தன.

(இ) கூட்டுறவு ஊழியர்களின் ஓய்வூதியத் திட்ட செயற்பாடுகளுக்குத் தேவையான கணனி மென்பொருளைத் தயாரிப்பதற்கு ஏனைய நிறுவனத்துடன் ரூபா 672,000

பெறுமதிக்கு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய உடன்படிக்கைக் காலம் பூர்த்தியடைந்திருந்த போதிலும் தயாரிக்கப்பட்ட கணனி நிகழ்ச்சித்திட்டங்களின் சில செயற்பாடுகளை 2012 ஏப்ரல் மாதமளவிலும் செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ஈ) 2010 சனவரி 01 ஆம் திகதி முதல் தலைமை அமைச்சிற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் 2011 ஒக்டோபர் 07 ஆம் திகதி முதல் 2011 நவம்பர் 25 வரை சம்பளமற்ற லீவில் வெளிநாட்டிற்குச் சென்றிருந்த போதிலும் சுகாதார, சுதேச மருத்தும், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு அக் காலப்பகுதிக்காக ரூபா 50,928 தொகையினை சம்பளமாகச் செலுத்தியிரு

(உ) விவசாய திணைக்களத்தால் கொள்வனவு வழிகாட்டலுக்கு முரணாக 10,000 கிலோகிறாம் விதை மரமுந்திரிகைகளைக் கொள்வனவு செய்வதற்காக ஒட்டிசுட்டானில் குடியிருக்கும் வழங்குனருக்கு ரூபா 1,649,500 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் விவசாயிகளின் வீடுகளில் இருந்து விதைகளைச் சேகரிப்பதற்காக முற்பணமாக ரூபா 495,000 தொகை வழங்குனருக்குச் செலுத்தப்பட்டதாக முல்லைத்தீவு விவசாய பணிப்பாளரால அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஊ) வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் தோற்றுவிக்கப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு பரீட்சைகள் நடாத்தப்படுவதற்காக பரீட்சைகள் ஆணையாளருக்கு உரிய விண்ணப்பங்கள் பட்டியல்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படும் நடவடிக்கைகளுக்காக ஒரு விண்ணப்பத்திற்கு ரூபா 25 ஊக்குவிப்பு படி ஆளுனரால் அங்கீகரிக்கப்பட்டு ரூபா 423,700 தொகை 2011 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

(எ) அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையினை மிகைத்து மேலாக இருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 141,786 மற்றும் ரூபா 561,626 தொகைகள் சம்பளமாகவும் படிப்பணமாகவும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஏ) மஹவெவ பிரதேச பிரதம செயலாளரின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள 1968 ஆம் ஆண்டின் அளவிடப்பட்ட அடிப்படை வரைபட

இல. 190 இன் கீழ் அரசாங்கத்திற்குச் சொந்தமான 52.6 பேர்ச் அளவான மாதங்கஹவத்த காணி 1982 ஆம் ஆண்டு முதல் தனியார் நிறுவகத்தினால் அனுமதியின்றி பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அவ்வாதனம் முறையாக ஒப்படைக்கப்பட்டு குத்தகைப் பணத்தை அறவிடுவதற்கோ அல்லது பயன்படுத்தும் உரிமையினை மீளப் பெற்றுக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மஹவெவ பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசத்திலுள்ள ஹெவன கிராமத்தில் அமைந்துள்ள அரசாங்க காணியில் வரையறுக்கப்படாத ஹெவன வதுகஹமுல்ல சனச சங்கத்தினால் இற்றைக்கு 18 ஆண்டுகளுக்கு முன்னர் அனுமதியின்றி இருமாடிக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இந்த ஆதனம் முறையாக குத்தகைக்கு வழங்கப்பட்டு குத்தகை அறவிடுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மஹவெவ பிரதேச பிரதம செயலாளரின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள தொடுவாவ கிராமத்தில் அமைந்துள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான 30 ஏக்கர் விஸ்தீரணமான திக்கோதய காணியில் 10 ஏக்கர் 12 பேர்ச் 4/10/14231 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கையின் மூலம் 1992 சனவரி 01 ஆம் திகதி முதல் 30 ஆண்டுகளுக்கு இறால் உற்பத்திக்காக தனியார் வியாபாரிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், காணி மதிப்பிடப்பட்டு, மதிப்பீட்டுப் பெறுமதியில் 4% அளவான குத்தகைத் தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கான அளவீட்டுக் கட்டணமும் குத்தகையாளரிடம் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஓ) குருநாகவல் மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் காரியாலய வாகனங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில வாகனங்கள் நாளாந்த ஓட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நேரம் மற்றும் காவலாளியின் வாயில் குறிப்புப் புத்தகங்களில் குறிப்பிடப்பட்ட நேரத்துடன் இணக்கம் செய்யப்படாது இணைந்த படிகள் மற்றும் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்த காரணத்தினால் 2011 ஆகஸ்ட் 04 ஆம் திகதிய 10 ஆம் இலக்க உறுதிச்சீட்டினால் மாத்திரம் ரூபா 92,479 தொகையான இணைந்த படிகள் மற்றும் மேலதிக நேரவேலைக் கொடுப்பனவாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஔ) மாகாண சபை உறுப்பினர்களின் அபிவிருத்தித் திட்டத்திற்கான ஏற்பாட்டுத் தொகையின் மூலம் 07 சந்தர்ப்பங்களில் ரூபா 213,250 தொகை காரியாலய உபகரணங்கள் உள்ளடங்கலாக உபகரணங்கள் அரசாங்கக் காரியாலயத்திற்காக வழங்கப்பட்டிருந்தன. உரிய நிறுவகங்களின் செலவினத் தலைப்புகளில் இருந்து இதற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பொது மக்கள் மேம்பாட்டிற்காக உள்ள மாகாண சபை மூலதன நிதி ஏற்பாடுகளிலிருந்து செலவின நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 2.16 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, மகளிர் விவகார கிராமிய அபிவிருத்தி அமைச்சு 2011 சனவரி முதல் யூன் வரையான காலப்பகுதியின் போது வடமேல் மாகாண கிராம எழுச்சி ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட ரூபா 601,568 தொகையில் 65% தொகை உணவிற்காகவும் 19.6% விரிவுரைக் கட்டணத்திற்காகவும், 15.4% ஏனைய போக்குவரத்துச் செலவினம் மற்றும் சாரதிக் கொடுப்பனவிற்காகவும் செலவிடப்பட்டிருந்தன.

(ஆ) நீதிமன்றத்தில் இருந்து அறவிடப்பட்ட தொகையில் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்குச் செலுத்துவதற்காக 2008 ஒக்டோபர் முதல் 2010 திசெம்பர் வரை வைத்துக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 556,008 தொகை உரிய உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்படுவதற்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட்ட அரசிறைகள் பொறுப்பானவை அரச/ மாகாண சபை நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 2005 சனவரி 01 ஆம் திகதி முதல் 2011 மே 31 வரை சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 340,236 தொகையான அரசிறைகள் மாகாண சபை நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பட்டப் பின்படிப்பு பாடநெறியினைப் பின்பற்றுவதற்காக 2000 இற்கும் 2010 இற்கும் இடைப்பட்ட காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 17 ஆயுர்வேத வைத்தியர்களின் பாடநெறிக் கட்டணமான ரூபா 879,850 தொகை மாகாண ஆயுர்வேத திணைக்களத்தால் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த வைத்தியர்களால் உரிய சான்றிதழ்கள் 2012 ஆகஸ்ட் மாதம் வரை சமர்ப்பிக்கப்பட்டிராமையால் உரிய தொகையினை மீள அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வடமேல் மாகாணத்தில் ஆயுர்வேத மருத்துவக் கல்வியினை பிரபல்யப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டின் போது மேற்கொள்வதற்காக 603 செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியில் செயல் முன்னேற்றத்தைக் காண்பிக்கும் ஓர் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) புத்தகளம் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயத்திற்குரிய 04 வைத்தியசாலைகளுக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட பதிவுசெய்யப்பட்ட மற்றும் உதவி மருத்துவ உத்தியோகத்தர்கள் 04 பேர் றாகம வைத்தியசாலையில் நடாத்தப்பட்ட விடயம் சார் தத்துவவியல்துறை பாடவிதானத்தில் பங்குபற்றுவதற்காக சம்பளத்துடன் விடுவிக்கப்பட்டிருந்தும் அப் பாடநெறி நடாத்தப்படாமையால் 2010 சனவரி 18 ஆம் திகதி முதல் 2011 மே 05 வரை மீண்டும் சேவைக்குச் சமூகமளிக்காத காலத்திற்காக அவர்களுக்கு சம்பளங்கள் மற்றும் படிப்பணமாக ரூபா 1,128,864 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(எ) வடமேல் வீதி அபிவிருத்தி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும் மற்றும் கடற்றொழில் அமைச்சினால் மாகாண மக்களின் வாழ்க்கைத் தொழிலை எளிதாக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட கவர்ச்சிகர மீன் வளர்ப்பாளர்களுக்கான வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக குருநாகல் மாவட்டத்தில் 17 நலன்பெறுனர்களுக்காகவும் புத்தளம் மாவட்டத்தின் 24 நலன்பெறுனர்களுக்காகவும் ரூபா 677,320 பெறுமதியான 41 வலைகள் வளங்கப்பட்டிருந்தன. செயற்திட்டத்தின் தற்போதைய நிலையைத் தெளிவுபடுத்துவதற்கு உத்தியோகத்தர்களால் முடியாது போயிற்று.

(ஏ) வாடகை அறவிடப்படும் 18 உத்தியோகபூர்வ இல்லங்களின் வாடகைகளை உள்ளடக்கி பயன்பாட்டிற்காக எடுக்கப்படும் 41 உத்தியோகபூர்வ இல்லங்கள்

உள்ளமை அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் விவசாயத் திணைக்களம் 2012 மார்ச் 20 வரை உத்தியோகபூர்வ இல்லங்களை மதிப்பிட்டு வாடகைத் தொகையை நிர்ணயிப்பதற்கும் வாடகை உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதனை நாளதுவரையாக்கவும் இல்லை.

(ஐ) கால் நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் அதிகுளிரூட்டலின் கொள்வனவின் போது அதிக விலை தேர்ந்தெடுக்கப்பட்டதன் காரணமாக 50 குளிரூட்டிகளுக்காக ரூபா 80,000 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2012 மே 15 வரை உரிய செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கால் நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கொள்வனவுக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் 40-7371 ஆம் இலக்க வாகனம் ரூபா 444,940 தொகைக்கு திருத்துவதற்காக உடன்படிக்கை ஒன்று இன்றி தனியார் கராஜ் ஒன்றிற்கு 2009 யூலை 10 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் திருத்தவேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு வாகனம் 2011 நவம்பர் 27 ஆம் திகதி மீண்டும் பொறுப்பேற்கப்படுகையில் எடுத்துள்ள காலம் 2 வருடங்களும் 04 மாதங்களுமாக இருந்தன. அவ்வாறே திருத்த வேலைகளின் போது வாகனத்தில் இருந்து அகற்றப்பட்ட பாகங்கள் மீண்டும் களஞ்சியத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவும் இல்லை.

(ஓ) ஆனமடுவ பிரதேச செயலகத்தினால் மாகாண நிதி விதி 471.1 இன் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் 2011 மாகாண அபிவிருத்தி செயற்திட்டத்திற்குரிய ரூபா 2,014,025 பெறுமதியான பொருட்கள் 2012 பெப்ரவரி 13 வரை களஞ்சியப் பதிவேடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஔ) குளியாப்பிட்டிய வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் 2011 திசெம்பர் 31 ஆம் திகதி டயர் கொள்வனவிற்காக ரூபா 181,450 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2012 சனவரி 30 ஆந் திகதி வரை உரிய பொருள் திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(க) 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 153,945 தொகையான செலவினத்துடன் ஒப்பிடுகையில் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 171,860 தொகை யானைக்கால், தொழுநோய் மற்றும் எலிக்காய்ச்சல் நோய்களைக் குணப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்த போதிலும்

அறிவிக்கப்பட்டிருந்த நோயாளிகளின் எண்ணிக்கை முறையே 11 முதல் 23 வரையாகவும் 127 முதல் 161 வரையாகவும் 383 முதல் 1456 வரையாகவும் அதிகரித்திருந்ததுடன் எலிக்காய்ச்சல் நோயால் ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை 1 முதல் 18 வரையாக அதிகரித்திருந்தன.

(ங) ரூபா 169,000 பெறுமதிக்கு 4 டிரவர் 2 தொடர்பு உபகரணங்களின் (4 Pole Contractors) 2 இன் கொள்வனவு முறையற்றதெனச் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் பரிசோதனை செய்வதற்கு ஓர் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் பரிசோதனை அறிக்கை இதுவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ச) போதிய பிணை பெறப்படாது ஒப்பந்தம் வழங்கப்பட்டதன் காரணமாக ரூபா 12,981,947 பெறுமதியான வழங்கல்களில் காணப்பட்ட குறைபாடுகளுக்குரிய நட்டங்களை அறவிடுவதற்கு அல்லது பொருட்களை மீள அனுப்பிவைப்பதற்கு மாகாண கல்வி திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

(ஞ) மீளாய்வாண்டின் போது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட வேண்டிய பரீட்சை அட்டவணைப் படி 41 பரீட்சைகள் நடாத்தப்படுவதற்கு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 11 பரீட்சைகள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. 30 பரீட்சைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ட) 2011 ஆம் ஆண்டிற்காக புத்தளம் கல்வி வலயத்தில் 262 மாணவர்களுக்கு 01 மாதம் முதல் 08 மாதங்கள் வரையான காலப்பகுதி தொடர்பாகச் செலுத்தப்பட வேண்டிய மாணவர் உதவுதொகையான ரூபா 385,000 மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.17 பாடசாலை நிர்வாக பலவீனங்கள்

பின்வரும் விடயங்கள் தெரிவுச் செவ்வையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டன.

(அ) கல்வி அமைச்சுச் செயலாளரின் 1982 மார்ச் 30 ஆந் திகதிய 1982/02 ஆம் இலக்க, 2005 பெப்ரவரி 03 ஆந் திகதிய 1/2005 ஆம் இலக்க, 2008 செப்தெம்பர் 15 ஆந் திகதிய 2008/35 ஆம் இலக்க, 2009 மே 26 ஆம் திகதிய 2009/18 ஆம் இலக்க, 2010 மே 31 ஆம் திகதிய 2010/21 ஆம் இலக்க

சுற்றுநிருபத்திற்ய முரணாக பாடசாலைகளால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூபா 2,513,247 ஆகக் காணப்பட்டதுடன் ஒரு பாடசாலை மாத்திரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்கு மேலாக 19 மாணவர்களைச் சேர்த்திருந்தது.

(ஆ) மனித வள அபிவிருத்தி கல்வி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 2003 நவம்பர் 07 ஆம் திகதிய 2003/38 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு இணங்காத வகையில் செயற்பட்ட நிறுவனங்கள் பின்வருமாறாகும்.

(i) இப்பாகமுவ வலயக் கல்வி அலுவலகத்தின் 109 பாடசாலைகளிற்குரிய 636 ஆசிரியர்களில் 441 ஆசிரியர்கள் குறிப்பிட்ட காலப்பகுதியின் போது கற்பித்திருக்கவில்லை.

(ii) புத்தளம் வலய அலுவலகத்தின் ஒரு பாடசாலையில் 03 மேலதிக ஆசிரியர்கள் காணப்பட்டனர்.

(iii) மஹவ கஜனெக்கம பாடசாலையில் 07 வகுப்புகளிற்கு கற்பிக்க வேண்டிய 570 பாடவேளைகளில் 352 பாடவேளைகள் கற்பிக்கப்படாதிருந்த போதிலும் 06 மேலதிக ஆசிரியர்கள் காணப்பட்டனர்.

(iv) சிலாபம் கல்வி வலயத்திற்குரிய 05 பாடசாலைகளில் 06 ஆசிரியர்களுக்கு கடமைகள் வழங்கப்படாது 2010 சனவரி முதல் 2011 மே வரை ரூபா 1,964,165 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தன.

(v) சேர் ஜோன் கொத்தலாவல மகாவித்தியாலயத்தின் 84 ஆசிரியர்களுக்கு வாரம் ஒன்றிற்கு 324 பாடவேளை கல்விசாரா வேறு நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

(vi) மெதமுல்ல, டி மெல் நவோதயா வித்தியாலயத்தில் 30 ஆசிரியர்கள் ஒரு கிழமைக்கு கற்பிக்க வேண்டிய பாடவேளை 945 ஆக இருந்த போதிலும் 326 பாடவேளைக்கான நேர அட்டவணை வழங்கப்பட்டிருக்கவில்லை.

(vii) புத்தளம் வலய கல்விக் காரியாலயத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட 58 ஆசிரிய ஆலோசகர்கள் கோட்டக் கல்விக்காரியாலயத்தில் உள்ள பின்தங்கிய பாடசாலைகளுக்காக தமது சேவைகளை வழங்கியிருக்கவில்லை.

(viii) வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரம் இன்றி சேர் ஜோன் கொத்தலாவல வித்தியாலயம் ரூபா 1,809,905 தொகையும் மெத முல்ல த மெல் வித்தியாலயம் ரூபா 110,000 தொகையும் சேகரித்திருந்தது.

(ix) குளியாப்பிட்டிய கல்வி வலயப் பிரிவில் உள்ள 169 பாடசாலைகளின் மாணவர் எண்ணிக்கை 0 – 100 இடைப்பட்டதாகக் காணப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 60 ஆகக் காணப்பட்டது.

(x) மலகனை சரஸ்வதி வித்தியாலய கணனி அறை தூசி படிந்த நிலையில் காணப்பட்டதுடன் மழை நாட்களில் நீர் உள்ளே கசிந்து செல்வதும் அவதானிக்கப்பட்டது.

(xi) மெதமுல்ல, டி மெல் நவோதயா வித்தியாலயத்தில் 04 ஆசிரியர்கள் அங்கீகாரம் இன்றி 148 லீவுகளைப் பெற்றிருந்தனர்.

(xii) நிக்கவரடிய கல்வி வலயத்தில் பெறுபேறுகள் உறுதிப்படுத்தப்பட்டிராத மற்றும் சாதாரண தர கணிதம் சித்தியடைந்திராத ஆசிரியர்களின் எண்ணிக்கை 222 ஆகக் காணப்பட்டது.

(இ) 2006/20 மற்றும் 2008/21 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 2-5 தரம் வரை சேர்க்கப்படக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 40 இற்கும் 6-11 தரம் வரை சேர்க்கப்படக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 45 இற்கும் வரையறுக்கப்பட வேண்டிய போதிலும் குருணாகல் சேர் ஜோன் கொத்தலாவல மகாவித்தியாலத்தில் 2011 யூன் 22 அளவில் 40 வகுப்புகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்கு மிகையாக 237 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் இப்பாகமுவ மெதமுல்ல டிமெல் வித்தியாலயத்தின் 17 வகுப்புகளுக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்கு மிகையாக 107 மாணவர்கள் 2011 நவம்பர் 20 வரையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஈ) குருணாகல் சேர் ஜோன் கொத்தலாவல மகாவித்தியாலத்தில் ரூபா 1,466,705 பெறுமதியான நிர்மாணிப்புகளும் 4 திருத்த வேலைகளும் தொடர்பாக அங்கீகாரம் இன்றி கொள்வனவு நடைமுறை வழிகாட்டிக்கு முரணாக வெளி நபர் ஒருவரினூடாக பணம் சேகரித்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**2.18 மாகாண பொதுக் கணக்குகள் தொடர்பான குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்தல்**

2011 நவம்பர் 29 ஆம் திகதிய மாகாண கணக்குகள் தொடர்பான குழுவின் கூட்ட அறிக்கையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தியோகபூர்வ இல்ல வாடகையை அறவிடுவது தொடர்பாக சிக்கன வாடகை அறவிடும் கட்டளை அமைச்சுச் செயலாளராலேயே வழங்கப்பட வேண்டிய போதிலும் அதுவும் ஒரு வருடத்திற்காக மாத்திரமே இருக்க வேண்டியதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் காரியாலயத்தினால் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.19 செயலாற்றல்**

**2.19.1 அரசாங்க மானியம்**

மாகாண சபை அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளும் செலவு செய்தல்களும் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| | மூலம் | நிதி ஏற்பாடு | செலவு | குறைவான பயன்பாடு |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | பண்புரீதியான மானியம் | 330,000,000 | 287,380,270 | 42,619,730 |
| (ii) | மாகாண குறித்த அபிவிருத்தி மானியம் | 1,575,000,000 | 1,339,492,691 | 235,507,309 |
| (iii) | ஒருங்கிணைந்த மானியம் | 16,855,436,000 | 16,551,642,819 | 303,793,181 |
| (iv) | ஏனைய மானியம் | 244,000,000 | 118,429,848 | 125,570,152 |

**2.19.2 மாகாண அபிவிருத்தி திட்டம்**

மீளாய்வாண்டிற்காக மாகாண அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் புதிய வேலைகள்

மற்றும் தொடர் வேலைகளின் கீழ் ரூபா 1,754,150,000 பெறுமதியான 4886 வேலைப் பிரேரணைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அந்த வேலைப் பிரேரணைகளின் செயல் முன்னேற்றம் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது.

| | | புதிய வேலை | தொடர் வேலை | மொத்த வேலைப் பிரேரணைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட வேலை | 4795 | 62 | 4857 |
| (ஆ) | 50% இற்கு குறைவாக பூர்த்தி செய்யப்பட்டவை | - | - | 17 |
| (இ) | 50% இற்கு மேல் மிகையாகப் பூர்த்தி செய்யப்பட்டவை | 17 | - | 12 |
| (ஈ) | ஆரம்பிக்கப்படாதவை | 12 | - | - |
| | மொத்தம் | 4824 | 62 | 4886 |

### 2.19.3 போதியளவில் நிறைவேற்றப்படாத குறிக்கோள்கள்

நிறுவகக் குறிக்கோள்கள் எதுவும் நிறைவேற்றப்படாத அல்லது போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

(அ) 2011 ஆம் ஆண்டின் போது புத்தளம் மாவட்டத்தின் அபிவிருத்திக்காக திட்டமிடப்பட்டிருந்த 12 வீதிகளில் ரூபா 6,300,000 செலவில் அபிவிருத்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த 09 வீதிகள் பல்வேறு காரணங்களினால் அபிவிருத்தி செய்வதில் இருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் பிரதான அமைச்சு இதற்காக புத்தளம் மாவட்டத்தில் புதிய 04 வீதிகளை மாத்திரம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கியிருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டில் பிரதான அமைச்சு வடமேல் மாகாண மாணவர் ஆசிரியர் பாராட்டுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 100,000 தொகையில் புத்தளம் மாவட்டத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டிற்கு பிரதான அமைச்சு 07 வீதிகளின் 3.95 கி.மீ. தூரத்தினை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 3,300,000 தொகையான நிதி ஏற்பாட்டை ஒதுக்கியிருந்ததுடன் இதில் ரூபா 3,006,354 தொகையைச் செலவிட்டு 1.9 கி.மீ

தூரம் மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது.

(ஈ) கொபெய்கனே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அரிசி பதனிடும் நிலையத்தை மேம்படுத்துவதற்காக 2010 நவம்பர் 15 ஆம் திகதி வரிசை அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 2,000,000 ஏற்பாட்டில் 2011 திசெம்பர் 01 ஆம் திகதி வரை ரூபா 1,600,000 உரிய செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படாது மேலும் பொது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் மத்திய அரசாங்கத்தின் 05 பாடசாலைகளில் 05 பால்விற்பனை நிலையங்களை ஸ்தாபிப்பதற்காக வரிசை அமைச்சிடமிருந்து ரூபா 1,000,000 தொகை 2010 நவம்பர் 25 ஆம் திகதி பெறப்பட்டிருந்தது. கணக்காய்வுச் சந்தர்ப்பமாகிய 2011 திசெம்பர் 01 ஆம் திகதி வரையும் அச் செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் 2011 ஆம் ஆண்டின் இறுதியில் கூட்டுறவு கணக்காய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பதவியணியில் 44 நபர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதன் அடிப்படையில் 2011 ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்ட கணக்காய்வும் அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கைகளும் முறையே 71% மற்றும் 62% ஆன செயற்முன்னேற்றத்தினை மாத்திரம் சுட்டிக்காட்டியிருந்தது.

(எ) தேசத்திற்கு நிழல் தேசிய மரநடுகை நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைவாக 2011 ஆம் ஆண்டின் போது வடமேல் வீதி அபிவிருத்தி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாண வேலைகளும் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் அமைச்சினால் மரக்கன்று நடுதல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட 06 பாடசாலைகளுக்காக களப்பை அண்மித்த ஒரு பாடசாலையில் இருந்து 1500 கடோலான மரக்கன்றுகளை நடுகைசெய்து பராமரிப்பதற்காக ஓர் உடன்படிபடிக்கை ஏற்படுத்தப்படாது ஒரு பாடசாலைக்கு ரூபா 50,000 படி 06 பாடசாலைகளுக்கு ரூபா 300,000 செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்குரிய 06 பாடசாலைகளால் 9000 மரக்கன்றுகள் நடப்பட வேண்டிய போதிலும் 2010 மார்ச் 31 வரை பாடசாலைகளால் 3545 மரக்கன்றுகள் மாத்திரமே நடப்பட்டிருந்தன.

(ஏ) மாகாண கல்வி திணைக்களத்தில் 2011 ஆம் ஆண்டின் போது 3411 ஆசிரியர் மேசைகள், ஆசிரியர் கதிரைகள், மாணவர் மேசைகள், மாணவர் கதிரைகள் மற்றும் சிறுவர் மேசைகள், சிறுவர் கதிரைகள் என்பன ரூபா 4,005,610 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டு 62 பாடசாலைகளுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கப்படுவதற்காக ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2011 திசெம்பர் 31 வரை இரு பாடசாலைகளுக்கு

இடையே 90 மாணவ மேசைகளும் 90 மாணவ கதிரைகளும் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

## 2.20 ஒப்பந்த நிர்வாகம்

### 2.20.1 செயற்திட்டங்கள்/ திட்டங்களை அமுல்படுத்துவதில் தாமதம்

| செயற்திட்டம் / திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தியாவதற்கு இலக்கிடப்பட்ட திகதி | 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| கல்கடவல கனிஷ்ட வித்தியலயத்தில் 20x20 சா.தர ஆய்வுகூடம் | 1,421,000 | - | - | 748,848 | ஒப்பந்தக்காரரினால் ஏற்பட்ட தாமதம் மற்றும் கட்டுநிதி பெறுவதிலுள்ள தாமதம் |
| தங்கொட்டுவ மகளிர் வித்தியாலயம் 60x20 உ.தர ஆய்வுகூடம் | 4,860,603 | 2011.08.30 | 2011.11.30 | 1,378,722 | ஒப்பந்தக்காரரின் செயற் திறனின்மையின் அடிப்படையில் உடன்படிக்கை இரத்துச்செய்யப் பட்டு வேறுதரப்பினருக்கு கையளிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல். |
| சிசுசெரிய ஆவணக் குறுந்திரைப்படம் | 785,746 | - | - | - | ஏற்ற பணிப்பாளரைத தேர்ந்தெடுப்பதிலான சிக்கல்கள் |

### 2.20.2 முற்றாகக் கைவிடப்பட்டுள்ள செயற்திட்டங்கள்/ திட்டங்கள்

8 பாடசாலைகளின் மலசல கூட நிர்மாணிப்பிற்காக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 1,016,066 ஆனதுடன் 2011 ஆம் ஆண்டின் போது இதற்காக ரூபா 600,000 தொகை ஒதுக்கப்பட்டு எஞ்சிய தொகை உரிய பாடசாலைகளின் அபிவிருத்தி சங்கங்கள் ஏற்க வேண்டிய போதிலும் உரிய சங்கங்களுக்கு நிதி இயலுமை இன்மையால் செயற்திட்டம் செயற்படவில்லை.

## 2.21 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

மாகாண சபையின் நிதித் திறன் மற்றும் நிதி முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டு குறித்த கூட்டம் கூட்டப்பட்டிராத அமைச்சுக்களும் திணைக்களங்களும் பின்வருமாறு காணப்பட்டன.

| **நிறுவகம்** | **அவதானிப்புகள்** |
| --- | --- |
| மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை |
| மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | 2011 ஆம் ஆண்டிற்காக ஒரு கூட்டம் மாத்திரம் கூட்டப்பட்டிருந்தது. |
| மாகாண ஆயுர் வேத திணைக்களம் | 2 குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. |
| சுகாதார, சுதேச மருத்துவ, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு | ஒரு கூட்டம் மாத்திரம் கூட்டப்பட்டிருந்தது. |

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு
(ஆ) கணக்கீடு மற்றும் வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் மற்றும் மனிதவளங்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்தம்
(உ) செயற்திட்டங்களை அமுலாக்கம்
(ஊ) நியதிச் சட்டங்களின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவகங்களின் நிதி மற்றும் செயற்பாட்டுக் கட்டுப்பாடு
(எ) வாகனப் பயன்பாடு